

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், எழும்பூர் தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பரிதி இளம்சுருதி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மாவட்ட கழக நிர்வாகிகள்,மாநகர, ஒன்றிய, நகர, பகுதி ,பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக சார்பணி அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய ,நகர, பகுதி, பேரூர் ,கழக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம், காட்டுமன்னார்கோவிலில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் ,கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### தஞ்சாவூரில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும்

# நோய்த் தடுப்பு மருந்து துறை சார்பில் 3வது சர்வதேச பொது சுகாதார மாநாடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

தஞ்சாவூர் அக்.7-

தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் ஆம்னி பேருந்து நிலைய வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறை சார்பில் 3வது சர்வதேச பொது சுகாதார மாநாட்டினையொட்டி, பொது சுகாதாரத்துறை சீர்மிகு திட்டங்களின் அணிவகுப்பு பேரணியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் (03.09.2024) அன்று கொடியசைத்து துவக்கி வைத்து இப்பேரணியில் கலந்து கொண்டார்கள்.



மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம்,தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி மேயர்கள் .சண்ராமநாதன், க.சரவணன் (கும்பகோணம்), மாவட்ட ஊராட்சித்தலைவர். ஆர். உஷாபுண்ணியமூர்த்தி, தஞ்சாவூர்மாநகராட்சிதுணைமேயர்கள் மரு.அஞ்சுகம்பூபதி, சுப.தமிழழகன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இந்த ஊர்வலத்தில் அமைச்சர் அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

பொதுசுகாதாரத் துறையின் சீர்மிகு திட்டங்கள் 36 திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பதாகைகளை ஏந்தி சுகாதாரத்துறை மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் 1800 பேர் கலந்து கொண்டார்கள்.

பேரணி தஞ்சாவூர் மகாராஜா மஹாலில் நிறைவடைந்து மாநாட்டு அரங்கில் கூடினார்கள். தஞ்சாவூர் மகாராஜா மஹாலில் நடைபெற்ற 3வது சர்வதேச பொது சுகாதார மாநாட்டில் அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

சென்னையில் கோரிக்கை மனு அளித்த தஞ்சாவூர் மாவட்டம் கபிஸ்தலம் லெட்சுமணன் அவரது மனைவி திருமதி.மாலதி ஆகியோருக்கு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி லிப்ட் இயக்குநர்களாக பணிநியமன ஆணைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் வழங்கினார்கள்.

தமிழகத்தில் பாம்பு மற்றும் நாய்கடிக்கான மருந்துகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இல்லாமல் இருந்தது. வட்டார, மாவட்ட, மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் தான் இருந்தது. தற்போது 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்பு மற்றும் நாய்கடிக்கான தடுப்பூசிகள் உள்ளது. இளம் வயதினருக்கான இதய பாதிப்பு தொடர்ந்துக் கொண்டு இருக்கும் சூழலில், அவர்களுக்கான மருத்துவம் 14 மாத்திரகளை மூலம் தமிழகத்தில் 11 ஆயிரம் உயிர்கள் காக்கப்பட்டுள்ளன. மக்களைத் தேடி மருத்துவம் மூலம் 1.93 லட்சம் பேரும், இன்னுயிர் காப்போம் திட்டத்தில் 2.50 லட்சம் உயிர்கள் விபத்தில் சிக்கியவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர் என உலக வங்கித் தலைவர்கள் மாநாட்டில் எடுத்துரைத்த போது, தமிழகத்தில் செயல்படுத்துகின்ற திட்டங்களை உலக நாடுகள் முழுவதும் செயல்படுத்த வேண்டும் எனக் கூறினார்கள்.

எந்த நோய் பாதிப்பு வந்தாலும் அதை தடுக்கின்ற ஆற்றல் தமிழக சுகாதார துறைக்கு உள்ளது என்பதை மக்களுக்கு உணர்த்தும் வகையிலும், மக்கள் அச்சமின்றி வாழவும் சுகாதாரத் துறை தாங்கி பிடிக்கும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு விதைப்பதற்கான இது போன்ற மாநாடுகளும், ஆய்வு கட்டுரைகளும் பெரியளவில் உறுதுணையாக இருக்கும்.

ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேரத்தில் 5 சுகபிரசவம் நடந்துள்ளது. சுகாதாரத்துறைக்கு இதை விட நல்ல சான்று கிடைத்து இருக்க முடியாது. தாய்மார்களை யோகா போன்ற பயிற்சிகள் அளிக்கப்படும் நிலையில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் முழுமையாக சுகபிரசவம் என்ற நல்ல நிலையை நோக்கி தமிழகம் சென்றுக் கொண்டு இருக்கிறது.

எந்த நோய் பாதிப்பு வந்தாலும் அதை உடனடியாக தடுக்கிற ஆற்றல் தமிழ்நாடு மருத்துவத் துறைக்கு இருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்துகின்ற வகையிலேயும் மக்கள் அச்சமின்றி வாழவும் மக்கள் எந்த வகையான நோய் பாதிப்புகள் வந்தாலும் தமிழ்நாடு மருத்துவத்துறை நம்மை தாங்கி பிடிக்கும் என்கின்ற நம்பிக்கையை அவர்களுக்கு விதைப்ப தற்கும் இது போன்ற மாநாடுகளில் பேசப்படுகிறது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில்தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் .க.கண்ணன், மாவட்டசுகாதாரஅலுவலர் மரு. வீ.சி.ஹேமசந்த்காந்திஅவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நீலநாராயணன்

### அக்டோபர் 7 (1996)



எல்லோராலும் 'நீலம்' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.

கழக அமைப்புச் செயலாளராகவும் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரு முறையும் பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் 'பெரியார் விருது' பெற்றவர்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களில் சிறை சென்றதோடு மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும்

# விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு 'நல்லோசை' சமூக ஆய்வகங்கள்!

## தரமணியில் அமைச்சர் மா.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.7-

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், சென்னை, தரமணியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு நவீன தொழில் நுட்பங்களை வளர்க்கும் விதமாக "நல்லோசை" சமூக ஆய்வகங்களை தொடங்கிவைத்தார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதியில் பயிலும் கல்லூரி மாணாக்கர்களுக்கு கல்வியோடு சேர்ந்து தொழில் வாய்ப்புகளையும், நவீன தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளவும், அவற்றுக்கான தனிப்பயிற்சி மூலம் கல்லூரி படிப்பினை முடித்து வெளியில் செல்லும் போதே வேலை பெறும் திறனை வளர்க்கும் வண்ணம் பயிற்சி வழங்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக "நல்லோசை" சமூக ஆய்வகங்களை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்களால் நேற்று முன்தினம் (05.10.2024) தொடங்கி வைக்கப்பட்டது.

"நல்லோசை" சமூக ஆய்வகங்களானது அறிவு பூர்வமான சிந்தனைகளை வளர்க்கவும், புதிய வேலை வாய்ப்புகளை பற்றி அறிந்து கொண்டு கல்லூரிக் காலத்திலேயே அதற்கேற்ப மாணாக்கர்களை தயார் செய்து, படிப்பை முடித்து விடுதியில் இருந்து செல்லும் ஒரு மாணவரை கையில் வேலை வாய்ப்புடன் இந்த சமூகத்தில் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வகையில் உருவாக்கப் பட்டு இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. எனவே இத்திட்டத்தின் மூலம் மாணாக்கர்கள் தொழிற்திறன் பெற்றவர்களாக மட்டுமின்றி ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியிலும் பங்கு வகிக்கும் சிறந்த மனிதர்களாகவும் உருவாக்கப்படுவார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களின் நலனில் அக்கறை கொண்டு விடுதி மாணாக்கர்களுக்கான உணவுக் கட்டணத்தை ரூ.1100/ இருந்து ரூ.1500/ ஆக உயர்த்தியுள்ளது. மேலும் விடுதி மாணாக்கர் பயன்பெறும் வகையில் "கற்றல் கற்பித்தல் அறைகள்", "நவீன முன்மாதிரி விடுதிகள்", "இணைய வழி நூலகங்கள்" மாணாக்கரை விடுதிக்கு வரவேற்க வரவேற்பு தொகுப்பு (Welcome Kit) ஆகிய நல்ல திட்டங்களை தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. அதில் இந்த "நல்லோசை" மணிமகுடமாக இருக்கும்.


